கொலன்னாவ நகர சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்னாவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொலன்னாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி மன்ற நிறுவன்களுக்கான இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவன்களுக்கான இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.31 ஆம் பந்தியின் பிரகாரம ரசொத்துக்கள் அகற்றலிளன் கீழ் நட்டம் ரூபா 344,497 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கத்தளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்களை அகற்றுவதில் ஏற்பட்ட நட்டம் ரூபா 344,497.43 நிலையான சொத்துக்களை விற்பனை செய்வதில் ஏற்பட்ட நட்டம் என்ற பெயரில் சீராக்கம் செய்யப்பட்டது.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும
(ஆ)	நியமத்தின் 3 அத்தியாயத்தின் 3.30 ஆம் பந்தியின் பிரகாரம் பணமாக கிடைத்த மூலதனச் செலவின மானியம் ரூபா 4,147,924 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 48,203,862 என சீராக்கப்பட்டு ரூபா 44,055,938 காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில், ஆண்டில் பணமாக கிடைத்த முழுவதும் மூலதனச் செலவு மானியங்களின் பெறுமதி மாத்திரம் சரிசெய்யப்படும் என்பதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.2 ஆம் பந்தியின் பிரகாரம், வெல்லம்பிட்டி வர்த்தக கட்டிட வளாகத்திற்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்த வேண்டிய பட்டியலுக்கு ரூபா. 7,157,040 தொகை 2025 ஜனவரி 31ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதும் ஆனால் கணக்குகளில் இருந்து தொகையை சரிசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	செயற்திட்டங்களுக்கு ஆண்டு முழுவதும் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படும் பெறுமதிக்கான மதிப்பீட்டுத் தொகை மாத்திரமே ஆண்டின் பாதீட்டில் ஒதுக்குவதற்கும் என்றும், ஆண்டில் முடிக்கப்படாத பட்டியல்களின் பெறுமதி கடன்கொடுத்தோராக ஒதுக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீண்டும் செலவினங்களுக்காக அரசினால் செய்யப்பட்ட மாற்றல்கள் ரூபா 186,810,708 ஆக இருந்த போதும் அது ரூபா 186,922,678 எனக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் வெவ்வேறு வருமானத்திற்கு செலவு	2025 ஆம் ஆண்டிலிருந்து வெவ்வேறு வருமானத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	வைக்க வேண்டிய ரூபா 111,970 தொகையும் உள்ளடக்கப்பட்டு இருந்தது.		
(ஆ)	கட்டிட கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய மரணச்சடங்கு மண்டப வசதிகள் விரிவுபடுத்துவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 14,599,323 தொகை பொருத்திகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	செலுத்த வேண்டிய செலவினம் கட்டிடக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படதாக.	கணக்குகள் சரியாக வகைப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன மானியங்களில் இருந்து செயற்திட்டங்களுக்குரியதாக செலுத்த வேண்டிய உள்ளவரான செலவின் ரூபா 9,442,834 ஆக இருந்த போதும் உடன்படிக்கை பெறுமதி. கணக்கீடு செய்தமையால் பெற வேண்டிய மூலதன பெறுவனவுகள் மற்றும் மூலதனச் செலவினங்கள் ரூபா 9,442,834 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் சரியான பெறுமதிக்காக பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டதாக.	சரியாகு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 458,571 தொகைக்கு உள்ளூாட்சி மன்ற நிறுவனத்திடம் இருந்து ரூபா 435,643 தொகை கிடைக்கப்பெற்று இருந்த போதும் அத்தொகை மூலதனம் மானியங்களின் கீழும் கணக்கீடு செய்தமையால் பெறவேண்டிய மூலதனப் பெறுவனவு மற்றும் செலவினங்களுக்காக ரூபா 435,643 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	கூடுதலாக கணக்கீடு செய்தமை சீராக்கம் செய்யப்பட்டுள்ளதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	நிர்மாண கடன் கொடுத்தோர் ஒதுக்கீட்டின் போது அப்பட்டியல் பெறுமதி கருத்தில் கொள்ளப் படாமல் உடன்படிக்கை பெறுமதி கணக்கீடு செய்யப்பட்ட மையால் ரூபா 9,230,435 ஆன கடன் கொடுத்தோர் மற்றும் சொத்துக்கள் பெறுமதி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.	கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்தும் குறித்த சொத்துக்களிலிருந்தும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	நிர்மாண கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் ஒதுக்கீட்டின் போது நிறுத்திவைத்தல் கருத்தில் கொள்ளப்படாமல் பெறுமதி தீர்மானித்தமையால் கடன் கொடுத்தோர் மற்றும் பெறவேண்டிய மூலதன பெறுவனவு மீதிகள் ரூபா 622,523 தொகை	ரூபா 168,277 ஆன பெறுமதி திரண்ட நிதியத்திற்கு மிகை மற்றும் குறை கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

	குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.		
(எ)	பெறுமாத்தேய்வு குறைத்தும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் மொத்த பெறுமானத் தேய்வுச் செலவினம் ரூபா 2,258,635 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	பெறுமானத்தேய்வு ரூபா 50,362 தொகை கணக்கு செய்ததாகவும் வேறுபாடு ரூபா 2,308,997 என சீராக்கம் செய்யப்பட்டதாக.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஏ)	2022 கடன் கொடுத்தோர் மற்றும் சொத்துக் கணக்குகளுக்குரிய கணக்கிடப்பட்ட ரூபா 550,000 பெறுமதியான மீத்தொட்டுமுல்ல கழிவுத் தொகுதியில் உள்ள கட்டிடத்தின் வயரிங் செயற் திட்டம் கைவிடப்பட்டிருந்த போதும் அது கணக்குகளில் இருந்து அகற்றப்படாமையால் கடன் கொடுத்தோர் மற்றும் சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	சொத்துக்கள் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கீடு செய்ததை அகற்றுவதற்கும் கட்டிட பெறுமனத்தேய்வு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 13,750 அகற்றுது சீராக்கம் செய்யப்பட்டதாக	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஐ)	.மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக அரசினால் செய்யப்பட்ட மாற்றல்கள் கணக்கீடு செய்யும் போது 2024 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன மானியத்தின் மூலம் நிலையான சொத்துக்கள் காலக்கழிவு பெறுமதி ரூபா 2,471,598 தொகை நடப்பாண்டின் வருமானத்திற்கு எடுக்காமையால் அப் பெறுமதியால் வருமானம் அதிகரித்து காணப்பட்டது	ரூபா 2,471,598 ஆன பெறுமதி சீராக்கம் செய்யப்பட்டதாக	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்
(ஒ)	நகர சபை கட்டிடத்தில் வயரிங் வேலை மதிரையாளர் மற்றும் கண்காணிப்பு கட்டணங்கள் ரூபா 360,000 தொகை கட்டிடக் கணத்திற்கு வரவு வைப்பதற்கு பதிலாக பொருத்திகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	மேற்பார்வை கட்டணங்கள் ரூபா 360,000 தொகை பொருத்திகள் கணக்கில் கணக்கீடு செய்து சீராக்கம் செய்வதாக	கணக்குகள் சரியாக வகைப்படுத்த வேண்டும்.
(ஓ)	நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் இனங் காணப்படாத மீதி ரூபா 40,968,364 ஆக இருந்த போதும் அதில் நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய செலுத்த வேண்டிய ரூபா 1,278,233 வெட் வரி மீதி கழிக்கப்பட்டு இனங் காணப்படாத ரீதியாக ரூபா 39,690,130 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.	இனங்காண படாத மீதிகளை கணக்கீடு செய்யும் போது நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புகளாக வெவ்வேறாக கணக்கீடு செய்வதாக. சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்	கணக்குகள் சரியாக வகைப்படுத்த வேண்டும்.

(ஔ)	வெள்ளம்பிட்டிய கடைத் தொகுதியின் நிர்மாணத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தை நடைமுறை வேலையாக கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்கு பதிலாக கட்டிட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.	2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதாக.	சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபை கட்டளை சட்டம் 45 ஆம் பிரிவு	வீதி அகழ்வு மற்றும் மலப் போக்குவரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வு சந்தர்ப்பங்கள் நான்கின் போது 176 சதுர மீற்றருக்கு முன் களவை இட்டு வீதியை மீண்டும் அமைப்பதற்காக ரூபா 958,559 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதிவரை அந்த வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கவில்லை.	பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கும் வேலை காப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது அது பராமரிக்கப்பட்டு வருகின்றதாக	உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் நி.பி 371(5)	2024 முதலாவது 04 மாதங்களுக்குள் பெற்றுக் கொண்ட ரூபா 113,300 ஆன முற்பணங்களை தீர்வு செய்த நாட்கள் 23 முதல் 106 வரையான காலதாமதம் ஒன்று இடம்பெற்று இருந்தது.	எதிர்காலத்தில் நி.பி 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக	நிதி பிரமாணங்களின் பிரகாரம் தீர்வு செய்யப்பட வேண்டும்.
(இ)	2016 திசெம்பர் 29 ஆம் திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	சபைக்கு சொந்தமான 06 வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு 06 மாதங் களுக்கு ஒருமுறை அவ்வாறு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சுற்றறிக்கை பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.7.2 வரி தேவைகளுக்கு இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
5 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக இனங்காணப்படாத மீதி ஒன்றாக முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,278,234 ஆன செலுத்த வேண்டிய வெட் மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	உள்நாட்டு இறைவரி ஆணையாளிடமிருந்து மேலும் விசாரித்து எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக.	பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,860,560 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,263,400 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்ப ட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	216,102,000	171,124,004	168,884,614	80,101,733	100,000,000	92,623,581	86,617,771	79,421,106
(ii)	வாடகை	31,054,068	11,124,119	22,223,433	10,075,817	11,252,616	11,444,682	10,435,416	10,092,266

(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	1,250,000	1,250,000	1,537,400	-	600,000	721,000	721,000	-
(iv)	ஏனைய வருமானம்	75,378,000	75,378,000	78,143,565	-	6,521,028	5,659,527	5,659,527	-
	மொத்தம்	**323,784,068**	**258,876,123**	**270,789,012**	**90,177,550**	**118,373,644**	110,448,790	**103,433,714**	**89,513,372**
		========	========	========	==========	========	========	========	=======

2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மற்றும் வரி ரூபா 80,101,733 தொகையில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவைகளின் பெறுமதி உடைய 97 நிலுவை மீதிகளிலிருந்து ரூபா 26,622,207 அறவிடப்பட வேண்டியதுடன் அது மொத்த நிலுவையில் 33 சதவிதமாக இருந்தது.	அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) சபைக்குரிய 164 கடைகளில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மீதி ரூபா 7,842,359 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது கிடைத்திருந்த கடை வாடகை ரூபா 9,576,070 இற்கு இடையே ரூபா 2,649,626 தொகை முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவையாக இருந்தது.	கடை அறைகளில் நிலுவை தொகை புதிய கடைகளை வழங்கும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக .	நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ) மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 226,518,124 ஆக இருந்ததுடன் அது 2022 முதல் 2024 வரையான ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து பெறவேண்டிய தொகையாக இருந்தது.	வழக்கறிஞர்களின் தாமதத்தால் உரித்து ஆவணங்கள் மூலம் அறவிடப்பட வேண்டிய உரித்து முத்திரைக் கட்டணங்களை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக	தாமதமின்றி பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்களை அறவீடு செய்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
250 பெண்களின் பங்கேற்புடன் ரூபா. 360,606 செலவில் மகளிர் தினம்	வண்ண A4 காகிதத் திற்காக ரூபா 12,000	சமூக வறுமையை ஒழிப்பதில் பயனுள்ள

கொண்டாடப்பட்டதுடன், அதில் ரூபா 14,000 வண்ண A4 காகிதத்தைப் பயன்படுத்தி கடதாசியால் பூக்களை தயாரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.	தொகை செலவிடப்பட்டது, மீதமுள்ள காகிதத்தைப் பயன்படுத்தி அன்றைய நிகழ்ச்சி நிரல் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டதாக	செலவுகளைச் செய்ய வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விரிவாக்கப் பணிகளால் சபையால் நிர்மாணிக்கப்பட்ட கடைகள் இடிக்கப்பட்டதால், கடை வாடகை வருமானம் இழந்திருந்ததுடன். வியாரிகள் சபைக்குச் சொந்தமான எஞ்சிய காணிகளில் கடைகளை மீண்டும் கட்டியிருந்தாலும், சபைக்குச் சொந்தமான காணிக்கான நில வாடகை வருமானத்தை அறவிடுவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	வரைவு நில வாடகை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கடைகள் மற்றும் வியாபாரநிலையங்களில் இருந்து அறவிடவேண்டிய ரூபா 26,556,763 வீதவரியை உள்ளுராட்சி அமைச்சின் நேரடி அங்கீகாரம் இல்லாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.	நகர சபைக் கட்டளை சட்டம் மற்றும் உள்ளூாட்சி திணைக்களத்தின் சுற்றறிக்கைகளின பிரகாரம் சபை நிறைவேற்றல் மூலம் விட்டுவிடுதல் நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளதாக.	தொடர்புடைய பொருத்தமான அங்கீகார்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். අදාළ
(இ)	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் முற்பணம் ரூபா 62,569,798 ஆக இருந்த போதும் அதற்குரிய அட்டவணைகளின் மீதி ரூபா 57,696,179 ஆக இருந்தமையால் ரூபா 4,873,613 ஆன வித்தியாசத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	ஏதிர்காலத்தில் இப்பெறுமதிகளை நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக	ஊரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	சபையினால் பயன்படுத்தப் படுகின்ற ரூபா 3,706,300,000 மீள்மதிப்பீட்டு பெறுமதியான 21 காணிகளுக்காக உரித்து உறுதி காணப்படவில்லை.	அனைத்து சொத்துக்களையும் கையேற்கும் செயல்முறை விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

.

(ஈ)	சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரங்களை காலாவதியாகும் திகதிக்குள் பெற்றுக்கொள்ளப்படாததால், அபராதம் செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.	எதிர்காலத்தில் இது போன்று நடக்காமல் இருப்பதை கவனத்திற் கொள்வதாக.	உரிய திகதியில் அனுமதிப்பத்திரங்களை பபெற வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 273,303,702 ஆன மீதியில் ஆண்டு 02 இற்கும் 03 இற்கும் இடைப்பட்டடிருந்த ரூபா 81,380,179 ஆக இருந்தது.	பரீட்சித்துபார்த்த பிறகும் பணம் கிடைக்கவில்லை என்றால் அது பொதுச் சபைக்கு அனுப்பி, பதிவழிப்பதற்கான பரிந்துரையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக.	பெறவேண்டிய மீதிகளை அறவிட வேண்டும்.
(எ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 219,979,131 ஆன நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் ஆண்டு 03 இற்கும் 04 இற்கும் இடைப்பட்டடிருந்த ரூபா 52,119,724 ஆக இருந்தது.	எதிர்காலத்தில் கடனை செலுத்த வேண்டியிருப்பதால், கடனை பதிவழிப்பதும் ஒதுக்கீடு செய்வதும் சாத்தியமில்லை என்பதாக	கடன்கொடுத்தோர் மீதிகளை அடையாளம் கண்டு தீர்க்க வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்கு சொந்தமான JCB பெகோ இயந்திரமொன்று 2021 ஆம் ஆண்டிலிருந்தும் உழவு இயந்திரமொன்று 2022 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்று காணப்பட்டன.	JCB இயந்திரத்தினை உத்தேச திருத்த நடவடிக்கை களை மேற்கொள்வதாகவும் உழவு இயந்திரத்தின் உதிரிப் பாகங்களை தேடிக்கொள்ள முடியாதுள்ளதாக.	பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(அ) இன் பிரகாரம், குறைந்தபட்சம் 03 வருட காலப்பகுதிக்கு எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகை திட்டம் ஒன்ற தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அத்தகைய திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.	அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதாக.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

மூன்று வகை பதவிகளுக்குரிய ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 92 ஆக இருந்தது. 25/2014 ஆம் இலக்க மற்றும் 29/2019 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் 2024 ஜுலை 01 ஆந் திகதிய ஆட்சேர்ப்பின் பேரில் ஏற்பட்ட மிகை ஊழியர் எண்ணிக்கை 46 ஆக இருந்ததுடன் அந்நியமனங்களை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் எவ்வித வேறுபாடொன்றும் பிரதான செயலாளரின் அங்கீகாரமின்றி மேற்கொள்ள முடியாதென்பதாக.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்து திருத்தத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய PEP/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின பிரகாரம் பாதீட்டு மதிப்பீடுகளும் எதிர்கால செயல் திட்டமும் தயாரிக்கப்படுவதாக	சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றப்படாததால், ரூபா 66,071,996 மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு எஞ்சியிருந்தது. .	அடையாள நிதிஏற்பாடாக ரூபா 100 தொகை தொடர்புடைய ஆண்டில் செலவு செய்யப்படுமா இல்லையா என்பதை உறுதியாக கூற முடியாததால் ஒதுக்கப்படுகிறது. இருப்பினும், அது	பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும்.

எதிர்பார்க்கப்படும் செலவினமாக இருப்பதால் அதனை பேணிச் செல்லும் செலவினமொன்றாக வைத்திருப்பதாக